வைத்தியர்களை பயிற்சி செய்கின்ற வகையில், சென்னை, மதுரை போன்ற இடங்களிலே, சிறந்த வகையில் கல்லூரி அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிடங்கள் எல்லாம் சீராக ஏற்படுத்தப்பட்ட பிறகு, அந்த எண்ணிக்கையை உயர்த்தலாம் என்று திட்டமிட்டு இருக்கிறோம் ரிஜிஸ்டர்ட் ஹோமியோபதி டாக்டர்கள் என்று 1,5295 பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஆங்காங்கே இந்த வைத்தியத்தில ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தில் வேலையில்லாமலுள்ள டாக்டர்கள் எண்ணிக்கை

*வினா எண். 690—**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு மக்கள நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற டாக்டர்கள் 1980 டிசம்பர் முடிய வேலையில்லாமல இருப்பவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு உடனடியாக வேலை கொடுப்பதற்கு அரசு என்ன ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் எச. வி. ஹண்டே : (அ) 31–12–1980 முடிய தமிழகத்தில் எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்பு முடித்து மருத்துவப் பணி மற்றும் குடும்பநல இயககுநர் அலுவலகத்தில் பணி வேண்டி பதிவு செய்துள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை 2,875 ஆகும். மேலும் 31—12—1980 முடிய வேலை வாய்ப்பு நிலையங்களில 1,156 எம்.பி.பி.எஸ். பட்டதாரிகள் பணி வேண்டி பதிவு செய்துள்ளனர்.

(ஆ) அரசு நிர்வாகத்தின் கீழ் எல்லா துறைகளிலும் வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுப்பதற்குச் சாத்தியக்கூறுகளில்லை. மருத்துவத்துறையைப் பொறுத்தமட்டில் மருத்துவ வசதிக்கேற்றவாறும் நிதி நிலைக்கேற்பவும் பணியிடங்கள் அவ்வப்போது உருவாக்கப்படுகின்றன.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பக்கத்திலே கிராமப்புறத்திலே டாக்டர்கள் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. 2 பேர்களுக்கு 1 டாக்டர் என்று வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வரமாட்டேன் என்ற நிலையில் இருக்கிறார்கள். ஆனால் இங்கே பார்த்தால் கிட்டத்தட்ட 2,875 பேர்களும், மற்றும் 1,156 பேர்களும் தங்களுடைய பெயர்களை பதிவு செய்து கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, இதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, கிராமப்புறங்களிலே அவர்களை அனுப்பி வேலை செய்ய ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

1982 மார்ச் 30]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவர்களைப் பொறுத்தவரையில அத்தனை பேரும், பதிவு செய்திருந்தாலும், வேலை வாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்திருந்தாலும்கூட ஒரு குறிப்பிட்ட வேலை என்று வருகிற நேரத்தில் அத்தனை பேரும் வருவதில்லை. அண்மையிலே பப்ளிக் சர்வீஸ் கமிஷன் கூட தேர்வு நடத்தியது, இப்போது ஹெல்த் டிபார்ட்மென்டிலே, மெடிகல் சர்வீசிலே கிடையாது, ஆனால் எத்தனை இடங்களுக்கு வேலை வாய்ப்பு இருந்ததோ அத்தனை இடங்களுக்கும் அவர்கள் வருவதில்லை. இன்னும் காலியாக இருக்கிறது. ஆகவே மனு செய்தவர்கள். They prefer a particular type of work அதுதான் பிரச்சனை. வேலைவாய்ப்பு இல்லாத நிலைமை அவ்வளவு இல்லை அந்தத் துறையிலே என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

திரு. வெ. அரங்கராசன் : தலைவரவர்களே, மலைப்பிரதேசங்களுக்குச் சென்று வைத்தியம் செய்ய டாக்டர்கள் சிரமப்படுகிறார்கள். வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு நாட்கள் தான் வைத்தியம் செய்யப்போகிறார்கள். பச்சைமலைப் பகுதியில்கூட அப்படி இருக்கிறது. அவர்களுக்கு கூடுதல் அலவன்ஸ் கொடுத்தால் ஒழுங்காக வைத்தியம் செய்யப் போவார்கள். அரசு அதைப் பரிசீலிக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, பிரைமரி ஹெல்த் சென்டர்களில் அப்பாயின்ட் செய்வதற்கு டாக்டர்கள் அவ்வளவாக வரவில்லை என்று ஏற்கனவே சொன்னார்கள். கடந்த ஆண்டு எத்தனை டாக்டர்கள் இன்டர்வியூவுக்கு வந்தார்கள்? தேவை எத்தனை பேர்கள்? அதோடு ஏற்கெனவே எம்.பி.பி.எஸ். முடித்துவிட்டு, ஹவுஸ் சர்ஜன் முடிந்தவுடனே சீனியாரிட்டி அடிப்படையில் அவர்களை அப்பாயின்ட் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, சென்ற ஆண்டு 1,400 பேர்களை எடுத்திருக்கிறோம். இப்போது பிரைமரி ஹெல்த் சென்டர்களில் (ஆரம்பச்சுகாதார நிலையங்கள்) 1,229 டாக்டர்கள் பணியாற்றுக்கொண்டிருக்கிறார்கள். சீனியாரிட்டி அடிப்படையில் தற்காலிகமாகத்தான் நியமிக்க முடியும். ஆனால் தற்காலிகமாக நியமிக்க வேண்டாம் என்று அரசு முடிவெடுத்திருப்பதால் தேர்வாணைக்குழு மூலம்தான் நாம் அவர்களை நியமிககிறோம். தேர்வாணைக குழுவில் என்ன சீனியாரிட்டியைச் சொல்கிறார்களோ அதை நாம் ஏற்றுக் கொளகிறோம். இப்போது அந்தவகையிலேதான இருககிறது. டி.எம்.எஸ். சைடில் 2,595 பேர்களும் டி.எம்.இ. சைடில் 1,226 பேர்களும் டி.பி.எச். சைடில் 1229 பேர்களும் இருக்கிறார்கள்.

திரு. செ. இராமலிங்கம்: தலைவரவர்களே, எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்று, பதிவு செய்துவிட்டு, வேலை இல்லாமல் இருப்பவர்கள 1156 டாக்டர்கள் என்று சொன்னார்கள். ஆனால் ஏற்கெனவே பணியில் இருப்பவர்கள் 4 ஆண்டுக்காலத்திற்கு லாங் லீவ் போட்டுவிட்டு அரபு நாடுகளுக்கு சென்றிருக்கிறார்கள். அதன் காரணமாக ஆயிரக்கணக்கான இடங்கள காலியாக இருக்கின்றன. அவர்கள் எல்லாம் இராஜிநாமா செய்துவிட்டதாகக் கருதி, அந்த இடங்களில் வேலையில்லாமல் இருக்கிற டாக்டர்களை நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அரபு நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறேன். அங்கே நீங்கள் சொல்கிறமாதிரி ஆயிரக்கணக்கில் இல்லை.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும் தகவல் சரியல்ல. அப்படி யாராவது லாங் லீவ் போட்டுவிட்டு சென்றால் அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டு விடுவார்கள். ஏதோ 3, 4 பேர்கள் போயிருக்கலாம். உடனடியாக அவர்களை பணி நீக்கம் செய்து விடுகிறார்கள். முன்னால இருந்ததைவிட இப்போது ரொம்ப ஸ்டிரிக்டாக இருக்கிறோம். யார் லாங் லீவ் போட்டுவிட்டுச் சென்றாலும் தயவு தாட்சணியமின்றி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. கோவைத் தம்பி: தலைவரவர்களே, தேர்வாணைக் குழு மூலமாக தேர்வு செய்யப்பட்ட டாக்டர்கள் குறிப்பிட்ட இடத்தில் பணியாற்ற ஒப்புக் கொள்ளாமல் அந்த இடம் காலியாக இருந்தால், மறுபடியும் தேர்வாணைக் குழுவிடம் கேட்டு பதிவு செய்துள்ள டாக்டர்களை அரசே நியமிக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, தேர்வாணைக் குழு ஒரு பட்டியலை அனுப்புகிறது. அந்தப் பட்டியலில் இருக்கிறவர்களை நியமிக்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. அவர்களை ஒரு இடத்திற்குப் போட்டவுடனே அவர்கள போகவிலலை என்றால் கொஞ்சம் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். நாம் போட்ட இடத்திற்கு அவர்கள் போகவில்லை என்றால் தயவு தாட்சணியமின்றி அவர்களை அந்த லிஸ்டிலிருந்து எடுத்துவிட்டு மீண்டும் தேர்வாணைக் குழுவிடம் ஆள் அனுப்பச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. அந்தவகையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அரசின் இந்த நடவடிக்கைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1982 மார்ச் 30]

திரு. எஸ். என். இராமசாமி : தலைவரவர்களே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு, வராத டாக்டர்களுக்கு அரசு வேலை கொடுக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே. அந்தப் பிரச்சனை வரவில்லை. ஏனென்றால், அவர்கள் வரவில்லை என்றால் உத்தியோகம் கிடையாது.

கண்ணொளி இழந்தவர்களுக்கு கண்கள் பொருத்துப் பணி

*வினா எண் 691—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கண்ணொளி இழந்தவர்களுக்கு கண் பொருத்த தமிழ்நாட்டில் உள்ள கண் ஆராய்ச்சி நிலையத்தில் போதிய கண்கள் உள்ளனவா ?

(ஆ) இல்லையெனில் வெளிநாடுகளில் இருந்து கண் இறக்குமதி செய்யும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை

(ஆ) தற்போது இலங்கையில் உள்ள சர்வதேச கண் வங்கி மூலம் பெறப்படும் கண்விழிகளைத் தவிர, மற்றபடி வேறு நாடுகளிலிருந்து கண் விழிகளை இறக்குமதி செய்யும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இறந்து போய்விட்ட ஒருவருடைய உடல் எரிக்கப்பட்டாலோ அல்லது புதைக்கப்பட்டாலோ இறந்துபோனவருடைய உடல் எந்த ஆராய்ச்சிக்கும் பயன்படாமல் போய்விடுகிறது. ''ஆக்கப் பட்டப் பொருட்கள் அனைத்தும் அரசாங்கத்திற்குச் சொந்தம்'' என்ற தத்துவத்தின் அடிப்படையில் யார் இறந்தாலும் அவருடைய கண்கள் அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று சட்டம் கொண்டுவரப்படுமா ? அப்படி இறந்தவருடைய கண்களை எடுக்கும்போது முகத்தில் பொத்தல் விழுந்துவிடுவதால் கண்களைக் கொடுக்க உறவினர்கள் முன்வரவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட பிணங்களுக்கு கறுப்புக்கண்ணாடி வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.